
# தமிழ் முரசு

2-1




பில்ஹணன்
(காதல் சித்திரம்)
by A.S.A. சாமி
T.K. ஷண்முகம்
T.K. பகவதி M.S. திரௌபதி
மற்றும்
நடிக்கின்றனர்
டைரக்ஷன்
K.V. சீனிவாசன்
ஸ்டூடியோ
சென்ட்ரல் கோவை
டி.கே.எஸ். பிரதர்ஸ் & சேலம் ஷண்முகா பிலிம்ஸ்
தயாரிப்பு
Cinearts

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

# தமிழ் முரசு


| நதி : உ | ஆசிரியர் : ம. பொ. சிவஞானம் | பகுதி க |
|---|---|---|


## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| கால வேலைத் திட்டம் | தலையங்கம் | ... | ௩ |
| ரசுப் படை | | .... | ௧௧ |
| யருக்குக் கடிதம் | | ... | ௧௩ |
| ல் விளக்கம் | | ... | ௧௫ |
| சக்தி சீறுகிறது | ம. பொ. சி. | ... | ௧௭ |
| ழிலாளியின் குரல் | அரசு | ... | ௨௮ |
| மிழந்து வாழா மன்னன் | சொக்கதாசன் | ... | ௨௯ |
| க்கம் | போ. குருசாமி | ... | ௩௩ |
| | கா. மா. காளிதாசன் | ... | ௪௨ |
| ர் திருநாள் | | ... | ௪௩ |
| ரசுக் கழகங்கள் | | ... | ௪௫ |
| புரை | | ... | ௪௭ |



4 அணா

1-1-48

# ஆங்கிலத்திற்கு அடிமையா?

— "பாரதி தோண்டன்"

கோரபலி கொடுத்துலகில் அமைதி நாட்டிக்
"குடியரசு வளர்க" வெனக் கூறி நின்றோம்!
"பாரதனில் பிறநாட்டான் தமிழன் தன்பால்
பச்சைரத்தம் பருகலினி முடியா" தென்றோம்!
ஊரதனில், நாட்டினிலே, உலகம் தன்னில்
உயர்வுடனே தலைநிமிர்ந்து "தமிழ ராட்சி
வீரமது கொண்டது காண்!" என்று கூறி
விடுதலையாம் வழிதேடி விரைந்து நின்றோம்!

●

பலிகொடுத்தோம், விடுதலையும் பெற்றோம், ஆனால்
பழம் பெருமை தனைமறந்தோம்! பல்லைக் காட்டி
அலிகளென உணர்விழந்து அறிவு மின்றி
அயர்வதனில் ஆழ்ந்துவிட்டோம்! தமிழா கேளாய்:
"வலிமையுடன் நாம் பிறநாட் டாட்சியின்றி
வாழுகின்றோமென நினைந்து மகிழ வேண்டாம்!"
எலியோடித் தூங்கிடுமோர் சிங்கம் தன்முன்
எதிர்ப்பதுபோ லொருநிகழ்ச்சி என்னே விந்தை!

●

'ஆங்கிலத்தே வதை' யெனுமோர் அணங்கு ஆட்டம்
ஆடினள் காண் உலகமெனும் அரங்கின் முன்னால்!
வீங்கியது மறத்தமிழன் உள்ளம் அன்று;
விடுதலைநாம் பெற்றுவிட்ட இன்றும் கூட
தாங்கியவள் பதமலரைத் தஞ்சம் என்றே
தடுமாறி நின்றிடுதல் தகுமோ டாசொல்?

ஏங்குதடா மனது ! இனிப் பொறுக்க மாட்டோம் !!
எழுந்திடுவோம் ; ~~போர்வாட்கள் எடுப்போம் கையில்~~ !!!

●

கேடான நிலையடைதல் சகியோம் இன்றே
கிளர்ச்சிமுரா சார்த்திடுவோம் ; கிஞ்சிற் றேனும்
ஆடாத மனவுறுதி கொள்வோம் ! நம்மை
ஆட்டுவிக்கும் ஆங்கிலத்தை அழிப்போம் உண்மை !
கோடாரிக் காம்புகளைக் கொடுந்தீ மூட்டிக்
கொளுத்திடுவோம், மூச்சிலெலாம் குதித்து வாழும்
வாடாத தமிழதனை விண்மட்டோங்க
வளர்த்திடுவோம் ; தமிழ் முரசு அடிப்போம் வாரீர் !

---


Regd. T. M. No. 110920



“ ஸ்வஸ்திக் ”

இங்க்

பவுண்டன் பேனாககளுக்கு
பரிசுத்தமான பிரஞ்சிந்திய
தயாரிப்பை ஆதரிக்க
யாவரும்
உபயோகியுங்கள்

SWASTIK INK MANUFACTORY
(*Prop* :—N. R. N. Chari)
PONDICHERY

# சோஷலிசத் தமிழரசு வேண்டும்

## கிளர்ச்சியால் கிட்டாவிடில்
## புரட்சி செய்வோம்

### தமிழரசுக் கழக மாநாட்டில்
# ம. பொ. சி. தலைமையுரை

வரவேற்புத் தலைவர் அவர்களே! பிரதிநிதிகளே!
தமிழ்ப் பெருமக்களே வணக்கம்!

இம் மாநாட்டுக்கு என்னை நீங்கள் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்ன? கழகத்தைத் தோற்றுவித்து, அதன் கொள்கைகளை உருவாக்கியவன், ஊரூராகச் சென்று அக்கொள்கைகளுக்கு ஆதரவு தேடுபவன் என்பதைத் தவிர வேறென்ன இருக்க முடியும் கடந்த இருபதாண்டுகளின் ஓயாத உழைப்பால், உடல் வலி குறைவால் யான் ஓய்வுகொள்ள வேண்டிய நிலைமையை எய்தியுள்ளேன். என்றாலும், அந்நியன் அகன்ற பின்னும் என் அன்னை நாடாம் தமிழ்நாடு தனியாகவில்லை. தமிழர் நல்வாழ்வு வாழ வழியில்லை; தமிழ் மொழி வளர வகையில்லை; என்பதை நினைக்குந்தோறும் ஏமாற்றத்தால் பெருமூச்செறிகிறேன். சுதந்திரம் என்பதன் பொருளை நான்வாழும் இடத்திலிருந்து, நான் பேசும் மொழியிலிருந்து புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, என்னைப் பொறுத்த வரையில் சுதந்திரப் போர் நின்றுவிடவில்லை; தமிழ் நிலத்தில்

அது தொடர்ந்து நடைபெறவேண்டி இருக்கிறது. போர் முறை மாறலாம்; போர் முனையும் மாறலாம். ஆனால் போர் நிற்கவில்லை.]

இந்தியா சுதந்திரம் எய்துவதற்குத் தமிழினத்தவராகிய நாம இதர இந்திய தேசீய இனங்களோடு கை கோர்த்து நின்று கடமையைச் செய்தோம். சிதம்பரனார் காலத்திலிருந்து ஆகஸ்டு இயக்கம் வரை சுதந்திரத்திற்காகத் தமிழினத்தார் பட்ட அல்லல்களை உன்னுங்கால் என் உள்ளம் திடுக்கிடுகின்றது. வேங்கடத்துக்கு வடக்கேயுள்ள பிற இனத்தார் அனைவரும் செய்த தியாகத்தோடு தமிழகத்தாரின் தியாகத்தை ஒப்பிட்டுப் பார்த்தாலும்கூட மிகுந்திருக்குமே ஒழியக் குறைந்திருக்காது. விரிவு ஈண்டு வேண்டுவதில்லை. 'கடமையைச் செய்தோம்' என்ற நினைவைக் கொண்டுவரவே இதைக் கூறினேன்.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் தமிழினத்தார் பங்கு கொண்டது எதற்காக? தமிழகத்தின் விடுதலைக்கேயாம். எங்கே அந்த விடுதலை? தமிழர் வரலாற்று வழி தமிழகம் தனி நாடானதா? இல்லை. சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களால் வழிவழி ஆளப்பட்டு வந்த நம் தமிழ் நாடு—அசோக சாம்ராஜ்யத்துக்கும் அடி வணங்கிக் கைகட்டி, கப்பம் செலுத்தி அறியாத கன்னித் தமிழ் நாடு—தனியரசு பெற்றதா? அசோகனது அறவாழி இன்று ஆட்சியின் சின்னமாகக் காண்கின்றோம். ஆனால், அந்த அசோக சாம்ராஜ்யம் அழிந்த பல நூற்றாண்டுகளுக்குப் பின்னும் அமுலிலிருந்த தமிழ் அரசின் சின்னங்களாகிய வில், புலி, கயல் ஆகியவை சிறப்புப் பெற்றனவா? இல்லை, இல்லை, இல்லை.

என் அருமைத் தமிழர்களே! விடுதலைக்குப் பாடு பட்ட வீரர்களே! கடமையைச் செய்த நாம் உரிமையைப் பெற முடியாது முணுமுணுத்து நிற்கக் காரணம் என்ன? 'ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் நமக்குத் தலைமை தாங்கிய வர்கள்—'செய்யுங்கள் அல்லது சாவுங்கள்' என்று ஆணை யிட்டவர்கள்—இன்று நமது உரிமைகளை வழங்கத் தயங் குவதேன்? நம்மிடை விழிப்பில்லை; உரிமையைப் பெற ஒன்றுபட்ட கிளர்ச்சியில்லை.

நமது உரிமைகள் யாவை? இந்தியாவுக்குப் புது வாழ்வு என்றால் அது இந்திய வரலாற்றின் வழியான வாழ் வேயாம். இந்திய வரலாறென்பது ஒரே மாதிரியானதல்ல. மொழி வழியே வரலாறுகள் பல உண்டு. அவற்றில், தமிழ் வழங்கும் நிலத்தின் வரலாறு தனிப்பட்டதாகும். அந்த வரலாற்றுப்படி தமிழினத்தவராகிய நமது உரிமைத் தாயகம்—பிறப்பின் பெட்டகம்—நாம் தவழ்ந்து வளர்ந்த தொட்டில்—நமது வாழ்க்கைப் பூங்கா—எது? தமிழ்நாடு! தமிழ்நாடு! தமிழ்நாடு!

என் அருமைத் தமிழ் மக்களே! இயற்கையரண்களை எல்லைகளாகக் கொண்ட தாயகம் நம்போல் இன்னொரு இனத்துக்கு உண்டோ? பெண்மையும் ஆண்மையும் கலந்த இடத்தித மக்கள் சமூகம் உருவாகிறது. இதில் ஒன்றின்றி மற்றொன்றில்லை என்பதை நினைவூட்டத்தான் நம் முன்னோர் தெற்கெல்லைக்குக் குமரி என்ற பெண்மைக் குரிய பெயரும், வடக்கெல்லைக்கு வேங்கடம் என்ற ஆண் மைக்குரிய பெயரும் வைத்தனர் போலும்!

ஆனால், நமது பெருமைக்குரிய—வரலாற்றின் வழிப் பட்ட—வாழையடி வாழையாக நம் முன்னோர் வாழ்ந்து

வந்த—பனம்பாரனார் முதல் பாரதியார் வரையில் பல புலவர்கள் பாடி வைத்த—அந்த எல்லைகள் இன்று எங்கே? குமரி முனையை மலையாள ஆட்சி கொள்ளைகொண்டது. வேங்கட மலையை வெள்ளையர் ஆட்சி ஆந்திர நாட்டோடு இணைத்து விட்டது. மீண்டும் அவற்றைக் கைப்பற்ற வேண்டுமென்ற உறுதியுடன்தான் நாம் இங்கு கூடியுள்ளோம். "குமரியைக் கொள்ளைகொடோம்; வேங்கடத்தை விடமாட்டோம்" என்ற குரல்கள் இன்று எங்கும் ஒலிக்கின்றன.

குமரி முனையில் ஒழுங்கான முறையில் இயக்கம் உருவாகிவிட்டது. ஓராண்டுக்கு முன்பு நான் அங்கு சென்றபோது அங்குள்ள இளைஞர்கள் கண்ணீரால் என்னை வரவேற்றனர். அவர்கள் சிந்தியது ஆனந்தக் கண்ணீரல்ல; 'ஆதரிப்பாரற்ற அபலைகளானோம்' என்ற துக்கக் கண்ணீர். ஆம; நாங்கள் பரஸ்பரம் கண்ணீரைப் பறிமாறி உறவு கொண்டோம். அந்த இளைஞர் கூட்டம் இம் மாநாட்டில் இருக்கக்கண்டு என் உள்ளம் துள்ளுகின்றது. உவகை பொங்குகின்றது. அன்று இருள் சூழ்ந்த நிலையில் திருவிதாங்கூர் தமிழ்த் தாலூக்காக்களைச் சுற்றிப் பிரசாரம் செய்தேன். இன்றோ, தமிழகத்துப் பத்திரிகைகளெல்லாம் கட்சி வேற்றுமையின்றி அவர்களுக்கு ஆதரவு காட்டுகின்றன. இந்த ஆதரவு மென்மேலும வளர்ந்து வந்தால் தமிழகத்தின் தெற்கு முனை விரைவில் மீட்கப்படுவது திண்ணம்.

தமிழகத்தின் வடக்கெல்லையைப் பற்றி ஆராய்வோம். இங்கே நம்மிலேயே சிலருக்கு ஐயம் தோன்றி விடுகின்றது. "திருப்பதியைக் கேட்பது அநியாயம்" என்று துணிந்து கூறும் தமிழரும் தமிழ் நிலத்தில இல்லாமலில்லை. இந்தத்

தமிழ்ப் பெரு மக்களை வேண்டுகின்றேன் : ஆழ்ந்து சிந்தியுங்கள் ; அரசாங்க ஏடுகளை ஆராய்ந்து பாருங்கள். திருப்பதியைக் கேட்பது சரியா, தவறா என்பது புரிந்துவிடும். பனம்பாரனார் காலத்தில் மட்டுமல்ல, பாரதியார் காலம் வரை தமிழகத்தின் வடக்கெல்லை திருப்பதிமலைதான். 1911-ம் ஆண்டு மார்ச்சுமீ 31-உ வரையில் வட ஆற்காடு ஜில்லாவில்தான் திருப்பதி மலை இருந்தது. அந்த நாளில் வட ஆற்காடு ஜில்லா மிகப் பெரியதாய் இருந்த காரணத்தால் நிர்வாக நலன்களை முன்னிட்டு, வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த திருத்தணி, திருக்காளத்தி, கங்குந்தி, சந்திரகிரி, புங்கனூர், பலமனேரி, சித்தூர், புத்தூர் தாலூகாக்களையும், கடப்பை ஜில்லாவிலிருந்து மதனபல்லி, வாயல்பாடி என்ற இரண்டு தாலூகாக்களையும் இணைத்து சித்தூர் ஜில்லா உருவாக்கப்பட்டது. இவற்றின் விளைவாகத் தமிழ் மக்கள் பிழைப்புக்கும், பிற இனத்து அதிகாரிகளின் தயவுக்குமாகத் தெலுங்கு மொழி கற்கவும், பேசவும் வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்நியரான வெள்ளையர், ஆட்சியின் வசதிக்காகச் செய்த காரியத்தை ஆந்திரத் தலைவர்கள் தங்கள் இனத்தின் ஆதிக்கத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். இதனால் சித்தூர் ஜில்லாவின் தமிழ்த் தாலூக்காக்களில் தெலுங்கு பேசுவோர் பெருகினர். அவர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழிலும் நன்றாகப் பேசுவர் என்பதை மறந்துவிடக் கூடாது.

அங்கு தமிழே அறியாத ஆந்திரர் தொகை மிக மிகக் குறைவாகத்தான் இருக்குமென்பதை எவரும் உணர்ந்து கொள்ளலாம். அந்தச் சிறுபான்மை ஆந்திரர்களும் சித்தூர் ஜில்லாவின் தமிழ்த்தாலூக்காக்களில் குடியேறியவர்களே

யன்றி தமிழகத்தின் குடிமக்களல்ல. சென்னை நகரம் மாகாண அரசாங்கத்தின் தலை நகராக இருந்த காரணத்தால் வடக்கேயிருந்த ஆந்திரர்கள் வாணிபம், தொழில், உத்தியோகம் நீதிமன்ற வழக்குகள் ஆகியவை காரணமாக தெற்கு நோக்கிச் சென்னைக்கு வரலாயினர். அப்படி வந்தவர்களில் பலர் இடைப்பட்ட தமிழ் நிலங்களில் நிலைத்துவிடுவதும் இயல்பாயிற்று. ஆனால் தமிழருக்கு சென்னைக்கு வடக்கே அன்றாட அலுவல்கள் அதிகமாக இல்லாத காரணத்தால் அவர்கள் தமிழகத்தின் வடகோடியான சித்தூர் ஜில்லாவின் தமிழ்த் தாலுக்காக்களிலேயோ அல்லது ஆந்திர நாட்டின் பிற ஜில்லாக்களிலேயோ குடும்பம் குடும்பமாகக் குடியேறி அங்கே நிலைத்து வாழ்வது முடியாததாயிற்று. இன்று சித்தூர் ஜில்லா தமிழ்த் தாலுக்காக்களில் வாழும் தமிழர் எல்லோரும் பல நூற்றாண்டுகளாக அங்கேயே நிலைத்து வாழும் பழங்குடி மக்களாவர்.

சித்தூரில் தெலுங்கு மொழி பேசுவோரெல்லாம் ஆந்திரர்கள் என்று முடிவாகுமானால், தமிழ் ஜில்லாக்களில் பரவியுள்ள சுமார் 26 லட்சம் தெலுங்கரை ஆந்திரராகக் கருதி சிறுபான்மையினரைப்போல் வருங்காலத் தமிழரசு நடத்தவேண்டுமல்லவா ? துக்ககரமான அந்த நிலைமை நேருமானால் தமிழகத்திலுள்ள தெலுங்கு பேசும் மக்களில் எவ்வளவுபேரை வேலையிலிருந்து விலக்க நேரும் என்பதைச் சிந்தியுங்கள். ஆகவே, உங்களை நான் வேண்டுவதெல்லாம் இதுதான்:

தமிழகத்தின் வடக்கெல்லையிலுள்ள தெளிவில்லாத மொழிப் பிரச்னையை முன்னணியில் வைக்காது, அவ்வெல்லையின் வரலாறு, அங்குவாழும் மக்களின் மனப்பாங்கு,

1911-ம் ஆண்டுவரை அரசாங்க ஏடுகளிலிருக்கும் ஆதாரம் ஆகியவைகளைக்கொண்டு திருப்பதியைத் திரும்பப் பெற முயற்சிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். எல்லைக் கமிஷன் வரும்வரை நாம் சித்தூர் ஜில்லாவில் ஜனநாயக முறையில் பிரசாரம் செய்வோம். அங்குள்ள தமிழர்—தெலுங்கர் உறவை வளர்ப்போம். அங்கு வாழும் சிறுபான்மையின ரான ஆந்திரர்களுக்கும் உண்மையை உணர்த்துவோம். எல்லைக் குழுவினர் வந்தபின்னர் சர்ச்சைக்குரிய பிரதேசங் களில் வாக்கெடுக்கட்டும். அதன் முடிவு எதுவானாலும் அதை நாம் மக்களின் தீர்ப்பாகக் கொண்டு தலைவணங்கி ஏற்றுக்கொள்வோம். ஆனால், சென்னையிலிருந்தபடியே தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றோ, எல்லைக் கமிஷன் வரும்வரை வாய்மூடி இருக்கவேண்டுமென்றோ கூறு வதைத் தமிழரசுக் கழகம் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழகத்திலிருந்து துண்டுபட்ட மற்றொரு நிலம் புதுக்கோட்டை. தமிழகத்தின் ஒரு தாலுக்காவாகக்கூடக் கருதமுடியாத 1179 சதுரமைல்கள் கொண்ட துண்டு நிலம் ஒரு தனியரசாம்! என்ன புதுமை! ஏகாதிபத்தியங்களெல் லாம் மண்ணில் மறையும்காலத்தில் இந்த எதேச்சாதிகார மன்னர்களுக்குமட்டும் வாழ்த்துக் கூறுவதா? முடியவேமுடி யாது. புதுக்கோட்டை நிலத்தைத் தமிழகத்தோடு இணைத் தேயாகவேண்டும். புதுக்கோட்டைத் தமிழர் இதை உணர்ந்து கொண்டுவிட்டனர். அங்கே தமிழரசுக் கழகத் தின் கிளைக் கழகங்களும் தோன்றிவிட்டன.

பிரஞ்சுத் தமிழகத்தின் இன்றைய நிலை நமக்குக் கவலை யைத் தருகிறது. பிரஞ்சு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து விலகவேண்டுமென்ற உணர்ச்சியைக் குண்டர்களைக்கொண்டு

நசுக்கும் கொடுங்கோல் முறையை அங்குள்ள ஆட்சி கடைப்பிடித்து வருகிறது. பிரஞ்சுத் தமிழகத்து அரசியல் கட்சிகளின் கருத்து வேற்றுமைகளை கவர்னர் தனக்குச் சாதகமாகக் கொண்டுவிட்டார். இன்னொரு வேடிக்கை என்னவென்றால் ஏகாதிபத்திய வெறியனை பிரஞ்சுக் கவர்னருக்கு ஆத்மீகத் துறையில் அறிவைச் செலுத்தி ஆசிரம வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும் அரவிந்தரின் குழுவினர் ஆதரவு அளித்து வருவதுதான். மண்ணாசை வெறியர்களுக்கும், மடங்களின் தலைவர்களுக்கும் பண்டைநாளிலிருந்த தொடர்பு இன்றளவும் அறுந்துபோகவில்லை என்பதை அரவிந்த ஆசிரமம் செய்து காட்டுகிறதுபோலும்!

பிற்போக்கு வாதிகளின் செயல் எதுவாயினும், பிரஞ்சிந்தியத் தமிழர்களை வேண்டுகிறேன்: கட்சி வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுங்கள். கொடுங்கோலின் பேயாட்டமும், குண்டர்களின் கொடுமைகளும் கண்ட பின்னரும்கூட நீங்கள் ஒன்றுபடவில்லை என்றால், அது தமிழினமே தலைகுனியத்தக்க செயலாகும். புதிய தமிழகத்தை உருவாக்கும் இயக்கத்தில் திருவிதாங்கூர், புதுக்கோட்டை ஆகியவை போன்று பிரஞ்சுத் தமிழகமும் ஒரு பகுதியேயாகும். ஆகவே, பிரஞ்சுத் தமிழரின் சுதந்திரப் போருக்குத் தமிழரசுக் கழகம் நேர்முகமான ஆதரவு கொடுக்கும். பிரஞ்சிந்தியாவின் விஷயம் 'அந்நிய நாட்டு அரசியல்' என்று மத்திய அரசினர் தட்டிக் கழிப்பதைச் சென்னை அரசாங்கம் இனியும் பொறுத்திருக்கக்கூடாது. சென்னை அரசாங்கத் தலைமை அமைச்சர் பிரஞ்சிந்திய அரசாங்கத்தின் பேயாட்டத்துக்கு முடிவுகண்டு, அங்குள்ள தமிழரையும், தமிழ் நிலத்தையும் தமிழகத்தோடு சேர்க்க முனைவாராக.

இன்றுள்ள சென்னை மாகாணத்திற்குள்ளேயே ஆந்திரர்க்குமட்டும் சட்டசபை, மந்திரிசபை யோடுகூடிய ஒரு நிர்வாக உப மாகாணத்தை உருவாக்குவதென்ற முடிவுக்கு இந்திய அரசாங்கம் வந்துள்ளதாகத் தெரிகிறது. இப்படி நடைபெறுமானால் அதற்குப்பின் தமிழகம் தனிநாடாகும் என்பது இன்னும் நெடுங்காலத்திற்கு நினைக்கமுடியாததாகி விடும். அதுமட்டுமல்ல, இச் செயல் தமிழினத்தை அவமானத்திற் குள்ளாக்கியது மாகும். எனவே, தமிழினத்தை வேண்டுகிறேன். எல்லைக் கமிஷன் வருவதற்குள் ஒன்று படுங்கள்! உணர்ச்சி பெறுங்கள்! உரிமையைக் கேளுங்கள்! எங்கள் சொந்த நாட்டை அடிமையில் ஆழ்த்த, அதை அங்கம் அங்கமாகத் துண்டிக்க எந்த அந்நியர்க்கும் உரிமை இல்லை. அதைத் தடுத்து நிறுத்த எவ்விதத் தியாகத்திற்கும் பின்வாங்கமாட்டோம் என்று முழங்குங்கள்.

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு சுயநிர்ணயம் வழங்கினர். ஆனால், இந்திய காங்கிரசின் தலைமைப் பீடத்தார் அந்தச் சுயநிர்ணய உரிமையை மொழி வழி தேசிய இனங்களுக்கு பிரித்து வழங்க மறுத்துவிட்டனர். இந்திய அரசியல் நிர்ணய மன்றத்தில் தமிழகத்தின் பிரதிநிதிகளும் இருந்தார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்? தமிழ் இனத்தைப் பற்றி—தமிழர் பண்பாட்டைப்பற்றி—தமிழக வரலாற்றைப் பற்றி அவர்களில் பெரும்பாலோருக்குள்ள ஞானம் எவ்வளவு? அவர்கள் அங்கு சென்று பேசினார்களா?—பேசினால் யாருக்காகப் பேசினார்கள் என்பதை எல்லாம் நீங்கள் நன்கறிவீர்கள். ஆகவே, அ. நி. மன்றம் தயாரித்துள்ள புதிய சமஷ்டி அரசியலில் தமிழகம் தனியரசுரிமை கொண்ட ஒரு சுதந்திர அங்கமாக அல்லாமல், அடிமை மாகாணமாக சேர்க்

கப்பட்டுள்ளது. தமிழகத்தின் பொருளாதாரம்—கைத் தொழில்—வாணிபம் ஆகிய ஜீவாதாரமான உரிமைகள் பலம் வாய்ந்த மத்திய சர்க்கார் என்ற பெயரால் பறிக்கப் பட்டுள்ளன.

மாநாட்டு பிரதிநிதிகளே! கொஞ்சம் கருத்தூன்றிச் சிந்தியுங்கள். இந்திய அரசாங்கம் உத்தேசித்துள்ளபடி ஆந்திரருக்குத் தனி அரசு வழங்கி, தமிழகத்தின் தலை நகரான சென்னை நகரை ஆந்திரருக்கும், மலையாள, கன்னடத்திற்கும் உரிய பொது நகராக்கினால், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் இருந்ததைவிட இன்றைய சுதந்திர ஆட்சியில் பெற விருக்கும் சுக வாழ்வு என்ன ? தேச பக்தர்களை வேண்டுகிறேன். நாம் சிறை சென்று சீரழிந்த தெல்லாம் இன்றுள்ள பிற்போக்கு நிலையை நீடிக்க வைப்பதற்குத் தானா ? இல்லை ; இல்லை.

தமிழகம் பண்டை வரலாற்றின்படி, சுதந்திர நாடாகவும் வேண்டும். அதன் அரசியலை வகுக்க தமிழினத்தாருக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என்பதே தமிழரசுக் கழகத்தின் அரசியல் கொள்கை.

இப்படிச் செய்தால் இந்தியாவின் ஒற்றுமைக்குப் பங்கம் நேரும் என்று அஞ்சுகின்றனர் சிலர். தமிழரசுக் கழகத்தார் வேண்டுவது சுதந்திரத் தமிழரசே. என்றும் நாம் தமிழகத்தைச் சுற்றி வேலி கட்டி வாழ விரும்பவில்லை. "யாதும் ஊரே ; யாவரும் கேளிர்" என்ற பண்டைப் புலவன் காட்டிய சகோதரப் பண்பாட்டை ஒட்டியே நாம் தமிழரசு கோருகிறோம். எனவே, சுதந்திரத் தமிழகத்தின் சோஷியலிசக் குடியரசு பிற இந்திய தேசிய இனங்களின்

சோஷியலிசக் குடியரசுகள் அடங்கிய கூட்டரசில் இணைந்திருக்கவே விரும்புகிறது. ஆனால், அந்த இணைப்பு இஷ்டப்பட்டதாக இருக்கவேண்டுமே ஒழிய, கட்டாயத்தின் பேரில் இணைக்கப்படும் அடிமைச் சேர்க்கையாக இருக்கக் கூடாது என்பதே கழகத்தின் கருத்து. எனவே, பூகோளத்தைக் காட்டி இந்தியாவின் ஒற்றுமையை விரும்புவோருக்கு நாம் கூறுவது இதுதான். ஒன்றுபட்ட இந்தியாவா ? ஏற்றுக் கொள்ளுகிறோம். முதலில் மொழி வழியே நாடுகளைப் பிரித்து, அரசுகளை அமைக்க வழி செய்யுங்கள். அதன்பின் உரிமையைப் பெற்ற தமிழகம் பிற இனங்களோடு உறவு கொண்டு வாழ்வதைத் தடுக்கும் சக்தி இந்த உலகத்தில் இல்லை. உரிமையை வழங்காத நிலையில் உறவைப்பற்றி அதிகமாகப் பேசுவது ஏமாற்றுப் பேச்சு ஆகும்.

தமிழரசுக் கழகம் தமிழ் வழிப்பட்ட கலைகளை வளர்ப்பதில் திட்ட வட்டமான கொள்கைகளைக் கொண்டிருக்கிறது. தமிழினத்தைச் சீர்குலைத்த தீய சக்திகள் இரண்டு. ஒன்று ஜாதிப் பிரிவினை ; மற்றொன்று சமயத்தில் புகுந்த பொய்மை. இந்த இரண்டையும் ஒழித்துக் கட்டாதவரை தமிழர் ஒரே இனமாக வாழ்வது ஒருநாளும் இயலாது. கழகத்தைப் பொறுத்தவரையில் அதற்கு ஜாதி கிடையாது. சமயக் கொள்கைகள் தனி மனிதனின் நம்பிக்கையைப் பொறுத்தது. அவற்றிற்கும் அரசியலிற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. தொடர்பு இருக்கவும் கூடாது.

எனவே, சமயச் சார்பற்ற, எம்மதத்தவரும் சம்மதம் எனக் கொள்ளத்தக்க தமிழகத்தின் பொது இலக்கியங்களைப் போற்றி வளர்த்து, அவற்றின் மூலம் தமிழ் மக்கள்

புது வாழ்வு பெறச் செய்யவேண்டும் என்பது கழகத்தின் கருத்து.

தமிழரசுக் கழகம் வெறும் அரசுரிமையை வற்புறுத்துவதோடு நின்றுவிடப் போவதில்லை. கழகம் விரும்புவது, சுதந்திரத் தமிழகத்தில் சோஷியலிசக் குடியரசு. சுதந்திரம்—சுயநிர்ணயம்—சோஷியலிசம் ஆகிய மூன்று சொற்களும் பிரிக்க முடியாதவாறு ஒன்றோடொன்று பிணைந்து நிற்பதாகவே கழகம் கருதுகிறது. "சுதந்திரத் தமிழகம்" என்ற சொற்றொடரைக் காட்டி சுரண்டல் கூட்டத்தின் தலைமையில் தமிழ் மக்களைத் திரட்ட நாங்கள் விரும்பவில்லை. அந்த வகையில் சோஷியலிசக் கொள்கையைத் தாங்கியுள்ள எந்த இடதுசாரி கட்சியினரோடும் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்டு பாட்டாளி வர்க்கத்தின் உரிமைக்காகப் பாடுபட நாம் தயாராக இருக்கிறோம்.

அன்பார்ந்த பிரதிநிதிகளே!

உங்களது இனப்பற்று—மொழிப்பற்று மேல் மேலும் வளர்வதாக! நமது உரிமைகளைப்பற்றி சிந்திக்கத் துவங்கி இருக்கிறோம். சிந்தனை நம்மைச் செயலில் ஆழ்த்தும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. குமரி முதல் வேங்கடம் வரை உள்ள புதிய தமிழகத்தை உருவாக்க—அந்தத் தமிழகத்தில் சுதந்திர-சோஷலிசக் குடியரசை அமைக்க கிளர்ச்சி செய்வோம். கிளர்ச்சியால் முடியாவிடில் புரட்சி செய்வோம்.

வாழ்க தமிழகம்! வாழ்க தமிழினம்!


# ஐக்கியத் தமிழரசு அமைத்திடுவோம் வாரீர்!

## தமிழருக்கு திரு. "மாஜினி" அழைப்பு

**தமிழரசுக் கழக மாநாட்டில் திரு. அரங்கசாமி (மாஜினி) அவர்கள் நிகழ்த்திய தொடக்க விழாச் சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—**

தலைவர் அவர்களே, நண்பர்களே!

சரியான சமயத்தில் பக்குவமான சூழ்நிலையில் இன்று இங்கு தமிழரசுக் கழக மாநாடு கூடியிருப்பது ரொம்பவும் வரவேற்கத்தக்க விஷயம். நூற்றைம்பது ஆண்டுகளாக அந்நியனின் இரும்புப்பிடி கொடுங்கோல் ஆட்சியிலிருந்த பிறகு, நம் நாட்டை நாம் இப்போது திரும்ப அடைந்துள்ளோம். இதுவரை அந்நியனை விரட்டி அடிக்கும் எதிர்ப்பு சக்தியாகவே



நம் தேசிய சக்தி இருந்து வந்திருக்கிறது. ஏகாதிபத்திய எதேச்சாதிகாரத்தை எதிர்த்து, அதன் ஈவு இரக்கமற்ற சுரண்டலைத் தடுப்பதுடன் மட்டும்தான் நாம் இதுவரை நின்றிருந்தோம். ஆனால் இப்போதோ நிலைமை

மாறிவிட்டது. ஆகவே, இனி இவ்வளவு காலம்வரை அந்நிய அசுர சக்தி மீது பாயவிட்டிருந்த நமது சக்தியை சற்று திருப்பி, சீரழிந்து போயிருக்கும் தேச நிர்மாணப் பாதையில் செல்ல விடவேண்டும். இதுதான் தற்போது நம் முன்னுள்ள மகத்தான சாதனை. இந்த அரிய சாதனையை காரியாம்சத்தில் நிறைவேற்ற இங்கு கூடியிருக்கும் தமிழரசுக் கழக மாநாடு ஒரு மணியான திட்டத்தை வகுக்கும் என்று நம்புகிறேன்.

என்னைப் பொறுத்த வரையில், நாடு விடுதலை அடைந்துள்ள நிலையில், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து என் மனோநிலை தெளிவாக இருக்கிறது. ஆதிகாலத்தில் இந்தியாவில் கலையிலும், கலாச்சாரத்திலும், மொழியிலும் வேறுபட்ட 56 ராஜ்யங்கள் இருந்ததாக சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது. பின்னர் அந்நியர் படையெடுத்து நாட்டைப் பலவாறு அலங்கோலப்படுத்தினர். கடைசியாக வந்த பிரிட்டிஷாரின் காலடியில் இந்தியா சிக்கி நசுக்குண்டு ஓர் நூற்றாண்டுவரை கிடந்திருக்கிறது. கத்தி முனையில் தங்கள் ஆட்சியைப் பரப்பிய வெள்ளையருக்கு தேசத்தை மொழிவாரியாகப் பிரித்து நாட்டின் கலாச்சாரத்தை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்படித் தோன்ற முடியும்? ஆகவேதான், 'சுக்கு மிளகு சொல்லி வந்து, சுருக்க நம்மை கொள்ளையடித்த' அந்தப் பாதகர்கள் கொஞ்சமும் சம்பந்தா சம்பந்தமின்றி மொழியில் பல வகையிலும் வேறுபட்ட ஆந்திரர்களையும், கேரளர்களையும், தமிழர்களையும், கர்னாடகர்களையும் ஒன்று சேர்த்து இங்கு ஒரு கதம்ப மாகாணத்தை சிருஷ்டித்து, தேசிய இனங்களின் முன்னேற்றத்தையே சிதைவுபடுத்தினார்கள்.

ஆகவே, முதலில் இந்தச் சிதைவுக்கு இப்போது ஒரு பரிகாரம் தேடியாகவேண்டும். இந்தச் சீர்குலைவை இப்போது செப்பனிட்டாகவேண்டும். மொழிவாரியாக இம் மாகாணத்தைப் பிரித்தால்தான் அது சாத்தியம்.

மொழிவாரி மாகாணப் பிரிவினையை நாட்டிலுள்ள எல்லோருமே ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் சுடச்சுட தீர்க்கப்படாமல் நீண்ட காலமாகவே அந்தரங்கத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் இந்த விஷயம் எப்போது சுமூகமாகத் தீர்க்கப்படப்போகிறது என்பதுதான் தற்போதையப் பிரச்னை. இது எப்படியானாலும், ஆக்க வேலையில் முதற்படியாக விளங்கும் இந்தப் பிரச்னையை இனியும் ஆறப்போட விடக்கூடாது. அதற்கு உடனடியாக எவ்வகையிலும் பரிகாரம் தேடியாக வேண்டும்.

இதற்கு அடுத்தது எல்லைப் பிரச்னை. சென்னை மாகாணத்திலிருந்து தமிழ் நாடு பிரிந்தால், அதன் எல்லை என்ன? என்று அநேகர் கேட்கிறார்கள். அம்மாதிரி கேட்பவர்களுக்கு தலையை நிமிர்த்தி, நெஞ்சை உயர்த்தி குமரி முதல் திருவேங்கடம்வரை எங்கள் தாய்த்திருநாடு என்று அஞ்சாமல் கூறலாம். இது குறுகிய நோக்கமல்ல. உரிமையை வலியுறுத்தும் ஊக்கத்தின் திறன். சுயநல கலப்பற்று, சுரண்டப்படும் மக்களின் சுபீட்சத்திற்கு முன்வரும் சுத்தமான தியாக நெஞ்சத்தின் எதிரொலி.

குமரி முதல் வேங்கடம்வரை இடைப்பட்ட நிலப்பரப்பு தமிழருடையதே என்பதை எந்த வகையில் நிரூபிக்கவும் முடியும். இலக்கிய-சரித்திர பூர்வமாக நிரூபிக்க வேண்டுமா? "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு

நல்லுலகம்" என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பெயர்பெற்ற இலக்கியப்புலவரான பனம்பாரனார் கூறியிருப்பதே போதும் இதற்குச் சான்று.

ஜனநாயக முறைப்படி வேண்டுமானாலும் நமது எல்லைக் கோரிக்கை நியாயம் என்பதை நிலைநிறுத்திக் காட்ட முடியும். குமரி முதல் வேங்கடம்வரை பெரும்பான்மையாக வாழ்பவர்கள் தமிழர்களே. ஆதலால் அந்தப் பிரதேசம் அவர்களுக்கே சொந்தம் என்பதில் என்ன சந்தேகம்?

இதை நியாயமாகச் சொல்லிப் பார்ப்போம். சுமூகமாக தீர்க்க முயற்சிப்போம். தமிழர்களின் இம்மி நிலத்தைக்கூட அநியாயமாக அபகரிக்க பிரயத்தனம் நடக்குமானாலும், அதைத் தன் மானத் தமிழன் எவனும் சகிக்கமாட்டான். உடைமையும், உரிமையும் போனாலும் உரமான உள்ளம் உண்டு தமிழருக்கு. நூற்றாண்டுக்கணக்கான வருடங்கள் அன்னியனால் சுரண்டப்பட்டது போதும். இனியும் பிற சக்திகள் தமிழகத்தைச் சுரண்ட வருமாயின், அவற்றைச் சுட்டுப்பொசுக்க கலங்காத வைர நெஞ்சுண்டு தமிழருக்கு. இதை நடைமுறையில் நடத்திக் காட்டும் நாள் சமீபித்து விட்டது.

அடுத்த பிரச்னை என்ன? சென்ற ஆகஸ்ட் 15-ம் தேதி நாட்டில் ஆரம்பமான புது வாழ்வின் அருணோதயத்திலே, தேச மெங்கிலும் பல்வேறு மொழிகள் பேசும் இனத்தவர்கள் சிதறுண்டு கிடக்கும் தங்கள் மக்களை ஒன்று திரட்டி, சக்தி பொருந்திய ஐக்கிய அரசுகள் அமைத்துக் கொள்ள பிரம்மாண்டமான முறையிலே திட்டமிட்டு,

ஆச்சரியப்படத்தக்க அளவிலே கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிருர்கள்.

ஆந்திராவில், நிஜாம் ராஜ்யத்தில் பரவிக்கிடக்கும் 90 லட்சம் தெலுங்கர்களை இழுத்து இணைத்து, ஐக்கிய ஆந்திர அரசு அமைக்க, அற்புதமான வகையில் இயக்கம் ஆரம்பித்திருக்கிருர்கள் 2 கோடி ஆந்திர மக்கள்.

மைசூரிலும், ஹைதராபாத்திலும் அவிழ்ந்துகிடக்கும் தங்களது பல லட்ச மக்களை ஒன்று சேர்த்து, சரித்திரம் காணுத ஒரு ஐக்கிய கர்ளுடக அரசை கண்டு விடுவதென்று கண்டிப்பான உறுதியோடு காரியங்கள் நடத்திவருகிருர்கள்.

நிஜாம் ராஜ்பத்திலும், பம்பாய் மாகாணத்திலும் உதிர்ந்துகிடக்கும் தங்கள் மக்களை ஒன்றுபிணைத்து, ஒரு நிரதிசய ஐக்கிய மகாராஷ்ட்ர அரசு அமைத்துவிட ஆவன செய்துகொண்டிருக்கிருர்கள்.

ஆனுல், இமயத்தில் தமிழ்க்கொடி நாட்டி, இணையில்லா புகழ்பெற்ற இமயவரம்பன் வழியிலே வந்த வீரத் தமிழ் ஜாதி, இன்று என்ன செய்து கொண்டிருக்கிறது? வடக்கே கங்கைவரை படையெடுத்துச் சென்று, கங்கைகொண்ட சோழன் என்று சரித்திரத்திலேயே அழியாப் புகழ் பெற்றுவிட்ட அமர மன்னனின் சந்ததியிலே உதித்த தமிழ் இனம், இன்று என்ன செய்துகொண்டிருக்கிறது? சொந்த நாடு மட்டுமின்றி, கடல் கடந்து வெளி நாடுகளிலே சாவகம், கடாரம் வரை திக்விஜயம்செய்து வெற்றிக்கொடி நாட்டிவிட்டுத் திரும்பிய, தீர மன்னனின் மரபிலே தோன்றிய தமிழ் சந்ததி இன்று என்ன செய்துகொண்டிருக்கிறது?

அன்று நமது மதிப்பிற்குரிய மூதாதையர் செய்தது போல தமிழர்கள் இமயமேறி எட்டுத்திக்கும் வெற்றி கொட்ட தமிழ்க்கொடி நாட்ட வேண்டாம்.

அன்று நமது வீர மன்னர்கள் செய்ததுபோல, ஜாவா, மலேயா சென்று அத் தேசங்களை அடிபணியச்செய்து தமிழர்கள் ஜெயக்கொடி நாட்ட வேண்டாம்.

அண்டையிலே, பார்வைக்கு எட்டிய தூரத்தில், திருவிதாங்கூரில், மைசூரில், புதுச்சேரியில், காரைக்காலில், புதுக்கோட்டையில், சித்தூரில், யாழ்ப்பாணத்தில் காய்ந்த மனதோடு, நைந்த உள்ளத்தோடு, கண் பிதுங்கி கலங்கி நிற்கும் நமது சொந்த சகோதரர்களையாவது நம்முடன் இணைத்துப் பிணைத்து ஒரு ஐக்கிய தமிழரசைக் காண வேண்டாமா?

அதற்கு நாம் என்ன செய்துவிட்டோம்? இரத்தக் கலப்புக்கொண்ட நமது சொந்த சகோதரர்கள் நம்முடன் பிணைந்து வாழ நாம் என்ன சாதித்துவிட்டோம்? ஒன்றுமே இல்லை.

போனது போகட்டும். இதற்குமேலாவது அனல் கக்கும் பீரங்கி முனையிலும் தலைநிமிர்ந்து நின்ற வீரத் தமிழ் இனம், துப்பாக்கிச் சனியன்கள் உடலை ஊடுருவிச் சென்ற நிலைமையிலும் மனங்கலங்காது, மார்பு விம்ம நின்ற வீரத் தமிழ் ஜாதி, தன் தவறை உணர்ந்து சிதறுண்ட தமிழ் மக்களை ஒன்றுசேர்த்து ஐக்கிய தமிழகம் ஏற்படுத்தட்டும்.

இதுபோக, இதற்கு அடுத்தபடியாக நம் கவனத்தை ஈர்த்திருக்கும் பிரச்னை, சென்னை யாருக்கு? என்பது. ஆந்தி

ரர்கள் அந் நகரை தமதாக்க முழு மூச்சோடு பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சென்னையின் மேல் ஆந்திரர்களுக்கு அனுகூலமான எவ்வித உரிமையோ, ஆதாரமோ இயற்கை அமைப்போ சுத்தமாகக் கிடையாது. அதனால்தான் சென்னையின் ஒரு பகுதியைக் கேட்கின்றனரே தவிர, முழு சென்னையும் தமதே என்று கேட்க அவர்களுக்குத் துணிவில்லை. 'உலகின் சர்வ தேச பொது நகரம்போல, சென்னையும் ஆந்திரர், கேரளர், தமிழர், கன்னடர் ஆகியோரின் தனித்தனியான சட்ட சபைகளால் ஆளப்படவேண்டும்' என்றுகூட ஒரு பிரகஸ்பதி உளறி இருக்கிறார்.

1931-ம் வருஷ ஜனசங்கிகைப் பிரகாரம் பார்த்தாலுமே சென்னையில் தமிழர்கள் 70 சதவிகிதம் இருந்திருக்கிறார்கள். ஏறக்குறைய 15 வருஷங்களுக்குப் பிறகு இப்போதோ, இந்த சதவிகிதம் இன்னும் அதிகரித்திருக்கும். ஆகவே, சென்னை தமிழர்களுக்குத்தான் சொந்தம். மீண்டும் மீண்டும் இந்த விஷயத்தில் அவர்கள் அவசியமற்ற சர்ச்சையைக் கிளப்பிக்கொண்டிருந்தால், இதனால் பெரும் சங்கடத்திற்கு உள்ளாகுபவர்கள் ஆந்திரர்களே என்பதை நாம் அவர்களுக்கு எச்சரித்தாகவேண்டும்.

கடைசியாக, இரண்டரைக்கோடி தமிழ் மக்களாகிய நாம் விரும்புவது சென்னையைத் தலைநகராகக்கொண்ட வெறும் ஐக்கியத் தமிழரசுமட்டுமல்ல, வர்க்க பேதமற்ற, உயர்வு தாழ்வு நீங்கிய, ஆண்டான், அடிமை பாகுபாடு அகன்றொழிந்த ஒரு உண்மை சோஷியலிஸக் குடியரசு மத்திய சர்க்காருடன் அவசியமான தொடர்புகொண்ட

ரூ த்தில் இந்த நாட்டிலே ஏற்படவேண்டும். அப்போது தான் தமிழர்களாகிய நாம், நமது உன்னத ஒப்புயர்வற்ற லட்சியத்தை அடைந்து விட்டதாகப் பெருமைகொள்ள முடியும். ஆகவே, இங்கு கூடியிருக்கும எண்ணற்ற தமிழன்பர்கள், இந்த மகோன்னத லட்சிய பாதையில் தமிழ் நாட்டைப் பத்திரமாக நடத்திச் செல்வதற்கான சிறந்த வழி, துறைகளை வகுத்துத் தருவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

---

## தமிழரசுக் கழகம்

# தலைவர் தேர்தல்

சென்னை தமிழரசுக் கழகச் செயலாளர் திரு. கொ. மொ. ஜனார்த்தனம் எழுதுகிறார் :

*9-11-47-ல் சென்னையில் நடந்த தமிழரசுக் கழக மாநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டத்தில், அடுத்த ஆண்டிற்கு திரு.* **ம. பொ. சிவஞானம்** *அவர்கள் கழகத்தின் தலைவராக ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

# வாழ வழியில்லையேல்;
# வருத்தத்துடன் பிரிவோம்!

---

## திரு. மீனாட்சிசுந்தரனார் முழக்கம்

*தமிழ்ப் பெருமக்களே!*

உங்கள் வரவு நல்வரவாகுக. இருளிலே வழி தெரியாது அலைகின்ற நமக்கு இந்த மாநாடு ஒளி தந்து வழி காட்டுவதாக. வெறும் ஆரவாரத்திற்கோ, உணர்ச்சி வெறிக்கோ, பேச்சு மயக்கிற்கோ இது காலம் அல்ல. ஆகஸ்டு 15உடனோடு புது வாழ்வு பிறந்ததெனக் நம்பினோம். ஏமாந்தோம். "தண்ணீர்விட்டோ வளர்த்தோம் இந்தப் பயிரை, கண்ணீர் விட்டு வளர்த்தோம்—கருகத் திருவுளமோ" என்று நம் நெஞ்சம் குமுறுகிறது.

வடநாட்டில் எரிமலை புகைகிறது. பாஞ்சாலமும், காஷ்மீரமும் இரத்தக் களமாகக் கிடக்கின்றன. எரிமலை அடங்கிவிடும் என நினைக்கின்றோம். எதிர்பார்த்திருக்க வேண்டியதனை எதிர்பார்க்கவில்லை. குற்ற விருந்து பரிமாறிப் பயனில்லை. ஆதலின், வெறியோ பகையோ கொள்ளாது அறியாமையின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று என அறிவு கொண்டு, உறுதியோடும் உண்மையோடும் உழைத்தால் வெற்றி காணலாம்.

அசோகனது பேரரசும் தமிழ் மன்னரை தன் கீழ் ஆளும் அரசராகக் கொள்ளாது, தன்னோடு ஒத்து எண்ணும் நட்பரசராகவே கொண்டான் என்பதனை என்றும் மறவாதபடி கல்லில் அடித்து வைத்திருக்கின்றான்.

பகை எடுப்பார் ஒருவர்பின் ஒருவராக வந்துகொண்டே இருந்தமையால், வடநாடு உயிரையும் நாட்டினையும் காக்கப் போர் புரியும் போர்க்களமாயிற்று. தென்னாடு போர்த்துக்

கேசியர் வரும்வரை கப்பற்படை கொண்டு, மேனாட்டோடும் கீழ் நாட்டோடும் தொடர்பு கொண்டு, அரசாண்டு வந்ததால் அனைவரும் நட்புரிமை கொள்ளும் பெரும்பேறு பெற்றிருந்தது. 'கடாரம் கொண்டான்' என்பது ஓர் ஊரின் பெயர். நம்சோழன் சுமத்ரா, ஜாவா முதலிய நாடுகளை வென்று ஆண்டதற்கு இன்னும் அந்தப் பெயர் சான்று பகர்கிறது. நம்முடைய தேக்குமரம் எகிப்து நாட்டுப் பட்டைக் கோபுரங்களினுள்ளே உரம் கொடுத்து விளங்குகிறது. நம்முடைய மயில் ஹீப்ரு நாட்டாரின் மனத்தைக் கவர்ந்து, அவர்கள் மொழியில் தோகி என மருவி வழங்கியது. அரிசி கிரேக்கருடைய நாவைத் தனதடிமையாக்கி அவர்கள் மொழியில் புகுந்ததன் பயனாக ஆங்கிலேயரும் ரைஸ் எனப் பேசக் கற்றனர். காலங்கண்ட கப்பற்படையோடு கடலெல்லாம் ஓடி விளையாடி உலகெலாம் போற்றத் தன் பொருள்களை வழங்கி வல்லரசுகளில் ஒன்றாக தமிழரசு விளங்கியது. இதன் பயனாக எல்லோருடனும் ஒத்துழைக்கும் மனப்பான்மை வளர்ந்து வந்தது.

இமயமலையில் வில்லும், புலியும், மீனும் பொறித்த மூத்தமிழ் அரசர்க்குப் பின் பல்லவ அரசர் கடல் சூழ்ந்த உலகெலாம் காத்து வாழ்ந்து மறைந்தபின் கங்கை கொண்டு, கடாரங் கொண்டு, ஜெயங்கொண்ட சோழன் ஆண்டபின் தமிழ்நாடு சீர்குன்றத் தொடங்கிய நிலையிலும், வடநாட்டுக் குழப்பத்தை தென்னாட்டில் புகாதபடி தடுக்க எழுந்த விஜயநகரத்தரசரோடும், மராட்டியர்களோடும் ஒத்துழைத்து அமைதியை நிலைநாட்ட முயன்றது. மேல்நாட்டில் இருந்துவந்த பல அறிஞர்களும் இந்த நாட்டின் பண்பாட்டையும், தமிழ்மொழியின் பெருமையையும் கண்டு வியந்து வீரமா முனிவரைப்போல தமிழராகவே வாழவும் தொடங்கினர். அரவிந்தர் தமிழ்ப் புதுவையில் வாழ்வது, ஆனிபெசன்ட் அம்மையார் அடையாற்றில் குளிப்பதும், விவேகானந்தரின் பெருமை அறிந்து, தமிழ் நாட்டினரே, மேனாட்டுக்கு அனுப்பியதும், சுபாஷ் போஸ் கண்ட இந்திய தேசியப்படையில் தமிழ்மக்கள் தலைமையும் வேண்டாது உழைக்க வந்ததும் இந்தியாவிலுள்ள நடு

அமைப்பு துரைத்தனத்தில் திரு. ஷண்முகனாரும், கோபால சாமியாரும், மாத்தையா அவர்களும் தென்னாட்டாராய் கால சஞ்சீவிகளாய் விளங்குவதும், பட்டினியாலும் கலகத்தாலும் வாடிய வங்காளத்தின் புண்ணை எல்லாம் ஆற்ற தமிழ்நாட்டு திரு. ராஜகோபாலாச்சாரியார் சென்றதும் பண்டைய தமிழ் நாட்டு வரலாற்றோடு ஒத்து நிகழும் செய்திகளேயாம். ஆதலின் தமிழ் நாடே இந்தியாவையும் காத்தல் வேண்டும்; உலகத்தினையும் காத்தல் வேண்டும். தமிழர்கள் தம் பெருமையை உணராது பதுங்கிக்கிடப்பது வருந்தத்தக்கது. அவர்கள் அறிவிலோ, ஆண்மையிலோ, அன்பிலோ ஆளும் திறத்திலோ, எந்நாட்டார்க்கும் பின் வாங்கினவர் அல்லர். ஆதலின் நம்முடைய உயர்வினை அறிந்து செருக்கின்றி, வெறியின்றி முன்னுக்கு வந்து உழைத்தல் வேண்டும். உலகம் நம்மை எதிர் பார்க்கின்றது.

தமிழன் தமிழனாக வாழ்ந்தால் தன் பண்பாட்டுச் சுவையினையும், மணத்தினையும் பிறர் துய்க்கத் தரக்கூடும். தமிழை மறந்தால் தமிழன் பண்பாடு எங்கே? மொழியாலேயே ஒரு தேசிய இனம் எழக்கூடும் என்பதனை சுவிட்சர்லாண்ட், கானடா முதலிய எடுத்துக் காட்டுக்களைக் காட்டி மறுப்பார் சிலர். ஆனால் தமிழ்நாடு தான் தோன்றிய நாள் முதலாகத் தனித்ததொரு வரலாறும் தனித்ததொரு பண்பாடும் பெற்று விளங்குவதோடு பரந்ததோர் எல்லையையும் கொண்டு விளங்குவதால் 'தமிழ்நாடு' என, ஓர் இனத்தவரின் நாடாக என்றென்றும் பேசி வந்துள்ளனர். இங்கு சிறப்பியல்பாக விளங்குவது சாதியன்று. பல சாதியினரும் இங்கு வாழ்கின்றனர். மதமும் சிறப்பியல்பன்று. கிறிஸ்தவரும், மகமதியரும், சமணரும், இந்துக்களும் பிறரும் தமிழர் எனத் தம்மைப் புகழ்ந்து கொண்டாடிக்கொள்கிறார்கள். ஆதலின் சிறப்பியல்பாக எஞ்சி நிற்பது மொழி ஒன்றேயாம். பிற இடங்களில் தேசிய இன உணர்ச்சியின் அடிப்படையாக மொழி அமையாததால், இங்கும் அமையாது என்று கூறுவது அறியாமையேயாம். இன உணர்ச்சி உள்ளத்து எழும் ஒரு உறுதி. பலநாட்

டில் பல வகையான அடிப்படைமேல் அது வீற்றிருந்து விளங்கும். தமிழ்நாட்டில் தமிழை அடிப்படையாகக் கொண்டு அது வீறு பெற்று விளங்குகின்றது.

> தமிழ்நாடு பிரிந்தாலன்றி வாழமுடியாத நிலை ஏற்படுமாயின், தமிழ்நாடு வருத்தத்துடன் பிரிந்து வாழ்வதில் தடை இல்லை. ஆனால் அந்தப் பெருங் கேடு பிறர் தீமையால் விளையுமே அன்றித் தமிழருடைய முயற்சியால் விளையாதென்பது உறுதி.

குழப்பத்தினிடையே வாழ்தலின் பயனாக நடுவிட அமைப்பு (மத்திய ஆட்சி) மாகாணங்களின் உரிமையையும் பறிக்க முயலுவது வருந்தத்தக்கது.

தமிழ்நாடு தமிழின் அடிப்படையில் விளங்கவேண்டுமானால், தமிழர் தமிழ்நாட்டிலுள்ளார் அனைவரும் தமிழ் கற்க உதவுதல் வேண்டும். தமிழ்நாட்டில் பிறமொழி பேசுவாரும் தமிழ்நாட்டின் வாழ்வினையே தம் வாழ்வெனக் கருதிச் சுரண்டற் கொள்கையை மறந்து வாழ்வார்களாயின் அவர்களும் தமிழரேயாம். இந்நாட்டுத் தெலுங்கரெல்லாம் தமிழரேயாம். ஆந்திர நாட்டில் வாழவேண்டும் என விரும்புவோரே ஆந்திரராவர். தெலுங்கர்களை ஆந்திரர்கள், ஆந்திரர்களாகக் கருதாமை யாவரும் அறிந்ததொன்றே. தமிழர்கள் அத்தகைய வேற்றுமை பாராட்டாது தெலுங்கறிந்தாரையே மந்திரிகளாகக் கொண்டு போற்றினமை 1920-ல் இருந்து உலகம் அறிந்த பழங்கதையாகும். ஆதலின் தெலுங்கர்கள் தம்மை ஆந்திரர்கள் என மருளுதல் கூடாது.

தமிழ்நாட்டின் எல்லையை வரையறுக்க வேண்டுவது இதனால் இன்றியமையாமை யாகிறது. பண்டைநாள் முதல் வடவேங்கடந் தென்குமரி எனப் பேசுவது வழக்கு. இன்னும் அவை தமிழ் பேசும் இடமாகவே இருப்பது உற்றுநோக்கத் தக்கது. ஆனால் சில இடங்களில் ஆந்திரர்கள் தமிழ்ப் பள்

ளிக்கூடங்களையே அமைக்காமையால், பல தமிழர் தெலுங்கில் எழுதி வருகின்றனர். அவ்வாறே மலையாளத்திலும் இருந்தது. இப்பொழுது மாறியுள்ளது. இங்கும் அந்த நிலைமை மாறும் என நினைக்கின்றோம். சித்தூரில் உள்ள தமிழ்ப் பழங்குடிகள் இன்றும் தமிழன்றி வேறொன்றும் கல்லாத நிலையைப் பிற தமிழர் கண்டு களிக்கவேண்டும். கிறித்தவப் பாதிரிமார்கள் மட்டுமே இந்த உணர்ச்சியை உணர்ந்து அவர்கள் தமிழன்னைபைத் தங்கள் பள்ளிக்கூடத்தின் வழியே காப்பாற்றி வருகின்றனர். தமிழறிய விரும்பும் மக்களுக்குத் தமிழ் கற்பியாதிருக்கும் பெருந் தூக்கத்திலிருந்து தமிழர் விழித்தெழுதல் வேண்டும். இதுவே அவர்கள் முதற் கடமை.

" அந்தந்த வட்டத்து மொழியிலேயே கல்வி கற்பிப்பது என்ற திட்டம் வந்துள்ளது. தமிழ்நாட்டின் எல்லை ஒருபுறம் இருக்கட்டும். தமிழில் கற்பிக்கும் வட்டம் இது என அறுதி இடவேண்டாமா? இதற்காகவேனும் இந்த எல்லை வரை அறுப்பது இன்றியமையாததாக இல்லையா?

இங்கு, ஆந்திரர் சென்னை மேலேயே கண்ணும் கருத்துமாக இருப்பது வருந்தத்தக்கது. வேண்டாத மக்களைத் தம் நாட்டிற்குள் வைத்திருப்பது அவர்களுக்கே கேடாய் விளையும் என்பதனை அவர்கள் இன்னும் உணராதது வருந்தத் தக்கதேயாம். சென்னை மக்களின் கணக்கினை இந்தக் கேள்வி எழுவதற்கு முன்னரே உலகறியும். அதனையும் புறக்கணித்து மன்றுடுவது வீண் வம்பேயாம்.

வரலாறு எவ்வாறாயினும் இன்று உள்ளநிலை என்ன? இதனை அமைதியோடு ஆராய்ந்து "மதராஸ் சலோ" 'சென்னையை விட்டுத் தமிழா' வெளியேறு என்று கூறுவது அறிவா? ஆண்மையா? வெறியா? வேடிக்கையா? இவ்வாறு நடப்பதால் அன்றோ ஆந்திர நாட்டினைச் சேர்ந்த இராயர் சிமையும் இந்த ஆந்திரத் தலைவரிடம் நம்பிக்கை கொள்ளாது பிரிந்து நிற்கிறது. இந்த வெறி காரணமாக அன்றோ உணவு

நெருக்கடி என்றும் பாராது அரிசி தருவதனையும் தடுக்க முன் வந்தனர்.

தமிழ் நாட்டில் ஊக்கமும், உணர்ச்சியும் பொங்கி வழிகின்றன. அவற்றினை நல்வழியில் செலுத்தி நாட்டினை வளர்க்கும் தலைவர்கள் தான் காணோம். தமிழரசுக் கழகம் ஒரு சிறிதேனும் இந்த வகையில் உழைக்கின்றதென்பதனை மக்கள் உணர்வது கண்டு எங்களுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி. இது ஒரு கட்சிப் பூசலுக்கு இடம் கோலவில்லை. சில கருத்துக்களைத் தமிழ்நாட்டின் எதிரே நினைப்பூட்டிக்கொண்டு இடப்பதே இதன் நோக்கம். ஊர்தோறும் கழகங்கள் தோன்றவேண்டும். நம் சிறுவர்களைச் சமுதாயத் தொண்டர் படையாகத் திரட்ட வேண்டும். பிறர் திரட்டும் படைகள் தமிழ்ப்பாண்பாட்டினை வெறுத்துத் தமிழிலே பேசுவதனைத் தடுத்து வருவது வருந்தத் தக்கது. இத்தகைய படை தற்காப்பிற்கும் உதவும். சமுதாயத் தொண்டிற்கும் உதவும். சாரணரியக்க முறைகளைப் பின்பற்றி இதனை அமைத்தால் சிறுவர்களுக்கும் சிறந்த கல்வி முறையாக உதவும்.

சோஷியலிஸக் கொள்கைகளைத் தமிழ்நாட்டிற்கேற்ற வகையில் தமிழில் விளக்கி எதிர்காலத் தமிழரசியல் அந்த வகையாக அமைய முயலவேண்டுவது தமிழரது கடமை. ஜமீன் இனம் முதலியன ஒழிவது இந்த சோஷியலிஸக் குடியரசிற்கு அடிகோலுவதாகும். மக்களுக்கு எல்லா வகையாலும் இத்தகைய கொள்கைகள் விளங்கும்படி செய்யவேண்டும். உணர்ச்சியினைத் தூண்டி விடுவதோடு, அந்த உணர்ச்சி பாயக்கூடிய அறிவு நிலையையும் பண்படுத்தவேண்டும். நம்முடைய மக்கள் தங்கள் நாட்டின் நிலையை அறிந்து, தங்களுக்கு வேண்டியவற்றைக் கோவை செய்து அவற்றினை எவ்வாறு பெறுவது என்று ஒரு திட்டம் வகுக்க முயலுதல் வேண்டும். இப்படி எல்லாம் எண்ணி வருவதனைவிடச் சிறந்த அரசியல் அறிவு வளர்ச்சியோ சமுதாயத் தொண்டோ இருக்க முடியாது. இந்த வகையில் எல்லாம் தமிழ்நாடு சிறந்து விளங்க இந்த மாநாடு துணை செய்வதாக.

# தீர்மானங்கள்

## 8-11-47-ல் சென்னையில் நடைபெற்ற தமிழரசுக்கழக மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) யாழ் நூல் ஆசிரியர் விபுலானந்த அடிகளார் காலஞ்சென்றமைபற்றி இம் மாநாடு வருந்துவதுடன் அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றது.

(2) தமிழகத்தைத் தனி நாடாக்குவதில் மத்திய சர்க்கார் தயக்கம் காட்டி வருவதை இம் மாநாடு கண்டிப்பதுடன், இனியேனும் விரைவில் செய்யுமாறு வற்புறுத்துகிறது. மற்றும் ஆறு மாதத்திற்குள் தமிழகப் பிரிவினையை ஏற்படுத்துவதற்காக எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்றும் இம் மாநாடு வற்புறுத்துகின்றது.

(3) இந்தியாவை மொழிவாரி நாடுகளாகப் பிரித்து, அந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் சுதந்தர சோஷியலிசக் குடியரசை நிலைநாட்டும் உரிமையை மக்களுக்குத் தந்து, அந்தக் குடியரசுகள் கொண்ட இந்திய சோஷியலிசக் கூட்டரசை அமைக்கத் தவறிவிட்டதற்காக இம் மாநாடு அரசியல் நிர்ணய மன்றத்தாரை வன்மையாகக் கண்டிக்கிறது.

மற்றும் "பலம் வாய்ந்த மத்திய சர்க்கார்" என்ற பெயரால் தமிழகத்தின் அரசியல், பொருளாதார உரிமைகளுக்கு இடையூறு விளைந்திருப்பதால் உடனடியாகத் தமிழகப் பிரிவினை ஏற்படவும், அதன் அரசியலைத் தமிழரே வகுக்கச் சுயநிர்ணய உரிமை பெறவும் பாடுபடவேண்டுமென்று அ. நி. மன்றத்தின் தமிழ் நாட்டு உறுப்பினரை இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(4) தமிழாசிரியர்கள் "துக்கவாரம்" கொண்டாடும் அளவுக்கு அவர்களை அலட்சியப்படுத்தும் சென்னை அரசாங்கத்தின் செயலை வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாகத் தமிழாசிரியர்களின் ஊதியத்தினை உயர்த்தி அமைக்கவேண்டுமென்றும், அவ்வாறு உயர்த்தும்போது இப்போது கல்வி நிலையங்களில வேலை பார்த்துவரும் தமிழாசிரியர்களுக்குள்ளே, வேண்டாத 'தகுதி' வேறுபாடுகள் காட்டி அவர்களைப் பிரிக்காது, அங்கங்கே வேலைபார்க்கும் ஏனைய ஆசிரியர்களுக்குச் சமமான ஊதியத் திட்டத்தை வகுத்து அளிக்கவேண்டுமென்றும் இம் மாநாடு சர்க்காரை வற்புறுத்துகிறது.

(5) பிரெஞ்சுத் தமிழக மக்கள் தமிழ் நாட்டோடு சேரவேண்டும் எனச் செய்துவரும் கிளர்ச்சியை இம் மாநாடு ஆதரிப்பதுடன், இந்திய அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு அந்தப்பிரதேசங்களில் பிரெஞ்சு ஆதிக்கத்தினை வெளியேற்றவேண்டும் எனக்கேட்டுக்கொள்ளுகிறது.

(6) சித்தூர் மாவட்டத்தில் தஸ்தாவேஜி பதிவு செய்வது முதலியவற்றைத் தெலுங்கு மொழியிலேயே செய்ய வேண்டுமென்று அங்குள்ள தமிழ் மக்களை ஆந்திர அதிகாரிகள் கட்டாயப் படுத்துவதை இம் மாநாடு கண்டிப்பதோடு, சென்னை அரசாங்கத்தினர் இதனைத் தடுத்து தமிழுக்கு உரிமை தேடித்தருமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

(7) தமிழ் நாட்டில் தொடக்கப் பள்ளிமுதல், கல்லூரி முடிய தமிழை முதல் மொழியாக ஆக்கி அதனை வருகிற ஆண்டிலேயே செயலில் கொண்டுவர வேண்டுமென்றும், இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தை ஆக்கவேண்டு

வேண்டும், இந்தி முதலிய பிற மொழிகளுக்குப் பாடத் திட்டத்தில் இடமளிப்பதோ, அம் மொழிகளுக்காக அரசாங்கத்தின் பொருளையும், காலத்தையும் செலவிடுவதோ கூடாது என்றும், இம் மாநாடு அரசாங்கத்தாருக்கு அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

(8) சென்னை மாகாணத்திலேயே பிறமொழி வழங்கும் இடங்களில் பெருவாரியாக வாழுகின்ற தமிழர்களது கலை—மொழி—முதலியன மறைந்தொழியாதபடி வளர்த்துக் கொள்வதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து தரும்படி சென்னை சர்க்காரை இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. மற்றும், இம் மாகாணத்திற்கு வெளியே இந்தியாவின் பிற பகுதிகளிலும் இலங்கை, மலேயா, போன்ற அயல் நாடுகளிலும் சேர்ந்தாற்போல் ஓரே இடத்தில் வாழும் தமிழர்களது நலன்களை அங்குள்ள அரசாங்கங்கள் புறக்கணிக்காது பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் இம் மாநாடு கோருகிறது.

(9) தமிழ் நாட்டின் தெற்கு, வடக்கு எல்லைகளை மீட்கவும், தலைநகராம் சென்னையை ஆந்திரர் அபகரிக்காது காக்கவும், தமிழகத்தில் உள்ள எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி, எல்லா கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்த "எல்லைப் பாதுகாப்புக் குழு" ஒன்றை அமைத்து மக்களிடை பிரசாரம் செய்யவும் அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட விருக்கும் 'எல்லை நிர்ணயக் குழு'வின் முன்னர் சமர்ப்பிப்பதற்கான சான்றுகளைத் தயாரிக்கவும் இம் மாநாடு கழகச் செயற் குழுவினருக்கு அதிகாரமளிக்கிறது.

(10) எதிர்காலத்தில் உருவாகும் ஒன்றுபட்ட சுதந்திரத் தமிழ்க் குடியரசில் புதுக்கோட்டை தமிழ் அரசும் இணைந்து கொள்ளும் என்ற உறுதிமொழியினை புதுக்கோட்டை மன்னர் உடனடியாக தமது அறிக்கை மூலம் வெளியிடவேண்டும் என்று இம் மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது. சான்றாக ஐக்கிய கேரளத்தில் கொச்சி சமஸ்தானமும் சேர்ந்துகொள்ளுமென்று கொச்சி மன்னர் விடுத்த அறிக்கையை இம் மாநாடு சுட்டிக் காட்டுகிறது.

(11) புதுக்கோட்டைத் தனியரசில் மக்கள் விரும்பும் வகையில் பொறுப் பாட்சியை உடனடியாக வழங்கவேண்டுமென்றும், தவறினால் துவங்கவிருக்கும் பொறுப்பாட்சிப் போராட்டத்தில் தமிழரசுக் கழகமும் பங்கு கொள்ளுமென்றும் இம் மாநாடு புதுக்கோட்டை மன்னருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

(12) சென்னை சர்க்கார் தமிழக உயர்வுக்காக தொடங்க இருந்த 'கோடிக்கரை' துறைமுகத்திற்கு அனுமதி மறுத்த மத்திய அரசாங்கத்தின் செய்கையை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(13) கோயில்களிலும், இதர வழிபாடுகளிலும், பாட புத்தகங்களிலும் அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் தமிழிலேயே வழங்கவேண்டுமென்றும் தெரு, புகை வண்டி நிலையம் முதலியவற்றின் பெயர்கள் திருத்தமான தமிழ்ப் பெயர்களால் வழங்கப் பெறவேண்டும் என்றும் இம் மாநாடு தமிழ் மக்களையும் அரசாங்கத்தாரையும், நகராண்மைக் கழகங்களையும் கேட்டுக்கொள்ளுகிறது.

(14) பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யுமாறு சென்னை அரசாங்கத்தாரை கோருகின்றது.

(15) ஜமீன்—இனும் ஒழிப்பு மசோதாவை வரவேற்ப தோடு நஷ்ட ஈடின்றியே அவற்றை விரைவில் ஒழிக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரை வற்புறுத்துகின்றது.

(16) சென்னை 'ஜார்ஜ் டவுனை' 'சிதம்பரம் நகர்' எனப் பெயர் மாற்றுமாறு சென்னை நகராண்மைக் கழகத் தாரையும்; அரசாங்கத்தாரையும் வற்புறுத்துகின்றது.

(17) திருவிதாங்கூர் தமிழகம் விடுதலை அடைவதற் காகப் போராடும், திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸை யும் பாராட்டுவதுடன், திருவிதாங்கூரில் தனித் தமிழ் மாகாண அமைப்பிற்கு வேண்டிய உழைப்பு, பொருள் முதலிய உதவிகளை அளிக்குமாறு தமிழ் மக்களை இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

---

ஆசிரியருக்கு கடிதம்

# 'விடுதலை'யின் பொய்ப் பிரச்சாரம்

ஐயா,

9-11-47ல் சென்னையில் நடைபெற்ற தமிழரசுக்கழக மாநாட்டில், திரு. வி. க. வும் திரு. காமராஜரும் பேசியதாக 12-11-47ல் 'விடுதலை'யில் வெளியாகியுள்ள செய்திகளை தாங்கள் பார்த்திருப்பீர்களென நம்புகிறேன். அந்தச்செய்தியில் திரு. வி. க. முதலில் வேண்டியது திராவிடநடே என்றும், திரு. காமராஜர் 'தமிழ

சுக்கழகமே' வேண்டியதில்லையென்றும் பேசியதாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. இது கலப்பற்ற பொய்ப்பிரச்சாரம். நானும் மாநாட்டில் கலந்து கொண்டு அவ்விரு தலைவர்களின் பேச்சுக்களையும் கேட்டேன். திரு. வி. க. தமது பேச்சுக்கிடையே ஓரிடத்தில் "முதலில் தமிழ்நாடு தமிழருக்கு ஆகவேண்டும். அதற்கப்புறம்......" என்று அவர் கூறி மேலே சொல்வதற்குள், கூட்டத்தின் ஒரு கோடியிலிருந்த சிலர் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று கோஷமிட்டனர். அந்தக் கோஷம் அடங்கு முன்னர் திரு. வி. க. 'திராவிடநாடு திராவிடருக்காவதோடு தமிழர் நின்று விடக்கூடாது; அப்புறம் இமயம் வரையும் செல்லவேண்டும். தமிழர் பண்பாடும் அதுதான்' என்றுகூறி ஐக்கிய இந்தியாவின் அவசியத்தையும் உணர்த்தினர்.

திரு. காமராஜர் மாநாட்டுத் தலைவர் பிரேரணையை ஆதரித்துப் பேசியிருக்க, அவர் 'கழகமே வேண்டாமென்று' கூறியதாக 'விடுதலை' கயறு திரிக்கின்றது. இம்மாதிரி பொய்ப் பிரச்சாரங்களுக்குத் தாங்கள் அடிக்கடி பதிலளிக்கவேண்டும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

தியாகராயநகர்
13-11-47.

ஆ. தாமோதரன்

குறிப்பு:—நண்பர் கூறுவது போன்று தமிழரசு மாநாட்டைப்பற்றி 'விடுதலை' பொய்யான தகவல்களை வெளியிட்டிருப்பதை நாமும் பார்த்தோம். 'விடுதலை' ஆசிரியர் ஒழுக்கத்தையும், மூடநம்பிக்கையில் சேர்த்து விட்டார் போலும். இந்த நிலையில் 'விடுதலை'யின் பொய்ப் பிரச்சாரங்களுக்கும் வீண் தாக்குதல்களுக்கும் பதில்அளித்துக்கொண்டிருக்க நாம் விரும்பவில்லை. தமிழ் இனத்தைப் பிளவு படுத்தும் திருப்பணியை 'விடுதலை'க்கே விட்டுவிடுவோம். கழகத்திற்குத் திட்டம் உண்டு பணியாற்ற. தீரம உண்டு வெற்றிபெற. மக்களுக்கு மனம் உண்டு ஆதரிக்க. மற்றவர் புன்சொல்லைப், பொய்ப் பிரச்சாரத்தைப் பொறுத்துக் கொள்வோம். காலம் வரும்போது நாடு தீர்ப்பளிக்கும்.

வெளியிட்டோர்: ம. பொ. சிவஞானம், 1-29, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி சென்னை. அச்சிட்டோர் திரு. கே. தி. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம் சென்னை.

# தமிழ் முரசு

(மாதம் இருமுறை)

உள்நாடு

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 6—0—0 |
| 6 மாதச் சந்தா | ரூ. | 3—0—0 |
| தனி இதழ் | ரூ. | 0—4—0 |

வெளிநாடு

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 7—0—0 |
| 6 மாதச் சந்தா | ரூ. | 3—8—0 |
| தனி இதழ் | ரூ. | 0—5—0 |

## விளம்பர விகிதம்

(ஒரு இதழில் வெளியிட)

| | | |
|---|---|---|
| அட்டை (வெளிப்புறம்) | ரூ. | 100. |
| அட்டை (உட்புறம்) | ரூ | 75. |
| புத்தகத்துள் ஒரு பக்கம் | ரூ | 50. |
| புத்தகத்துள் அரைப்பக்கம் | ரூ | 25. |

தமிழ் முரசுப் பதிப்பகம்

திருவல்லிக்கேணி :: சென்னை

Wrapper Printed at the Sengunthа Mithran Press, Madras 1